சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 166/2013

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர். திரு.சுப்ரமணி
க /பெ.

நாள் 27.01.2026

வயது.

தொழில்

கிராமம்.

வட்டம்.

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

நான் மனுவில் 1ம் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.1.** என் மகனின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.2.** என் மகனின் வாரிசு சான்றிதழ் **ம.த.சா.ஆ.3.** 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமத்தின் நகல் **ம.த.சா.ஆ.4**. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் நகல்கள் **ம.த.சா. ஆ.5** மற்றும் **ம.த.சா. ஆ.6.** எங்களின் ஆதார் அட்டை நகல்கள் **ம.த.சா.ஆ.7 மற்றும் 8.** எங்களுடைய வங்கி கணக்கு புத்தகத்தின் நகல்கள் **ம.த.சா.ஆ.9 மற்றும் 10.** என் மகனின் படிப்பு சான்றிதழ் **ம.த.சா.ஆ.11.** குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.12.** என் மகனின் 10ம் வகுப்பு பள்ளி மாற்றுச் சான்றிதழ் **ம.த.சா.ஆ.13.** என் மகன் குருநாதனின் ஓட்டுநர் உரிமம் நகல் **ம.த.சா. ஆ.14.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

19.11.2013 அன்று இரவு 7 மணியளவில் விபத்து ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தை என் மூத்த மகன் குருநாதன் ஓட்டிச் சென்றார். இருசக்கர வாகனத்தில் 4 நபர்கள் பயணம் செய்தார்கள் என்றால் 3 நபர்கள் சென்றார்கள். புகாரை நான் தான் காவல் நிலையத்தில் அளித்தேன். இறந்த என் மகன் எந்த வரிசையில் வாகனத்தில் அமர்ந்திருந்தார் என எனக்கு தெரியாது. கள்ளபிரான்புரத்தில் விபத்து ஏற்பட்டது. விபத்தின் போது இறந்த என் மகன் ஐடிஐ படித்துவிட்டு வீட்டில் இருந்தார். அதற்கான சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். விபத்தின் போது அஜித் எவ்வித வேலையும் செய்யவில்லை. தலைக்கவசம் அணிந்து சென்றாரா என்று நான் பார்க்கவில்லை. 4 நபர்கள் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்ததால், இருசக்கர வாகன ஓட்டுநர் நிலைதடுமாறி அவராகவே பேருந்தின் மீது மோதி விட்டார் என்றால் சரியல்ல. 2ம் எதிர் மனுதாரரைப் பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.